

தமிழ்நாடு எப்போதுமே அறிவியலையும் தொழில்நுட்பத்தையும் திறந்த மனதுடன் வரவேற்கும்:

முத்தமிழறிஞர் கலைஞர் அமைத்த அடித்தளத்தின் மீதுதான், இன்று அனைத்து வளர்ச்சிகளையும் கட்டியெழுப்புகிறோம்!

சென்னையில் நடைபெற்ற உமாஜின் தமிழ்நாடு - 2026 மாநாடு நிறைவு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

சென்னை, ஜன.11-

சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில், உமாஜின் தமிழ்நாடு - 2026 மாநாட்டின் நிறைவு விழா நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினார்.

அப்போது அவர், ''முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அமைத்துக் கொடுத்த இந்த அடித்தளத்தின் மீது தான், நாம் இன்று அனைத்து வளர்ச்சிகளையும் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறோம்'' என்று குறிப்பிட்டார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:

உமாஜின்(UMAGINE) தமிழ்நாடு - 2026 நிறைவு விழாவில் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உமாஜின் - 2026 இப்போது நிறைவடையும் தருணத்தில், இந்த உச்சி மாநாடு தனது நோக்கங்களை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. இது ஒரு அர்த்தமுள்ள மேடையை உருவாக்கியுள்ளது.

நம் எதிர்காலம் குறித்த கனவு உரையாடலாகவும், உரையாடல் ஒத்துழைப்பாகவும், இந்த ஒத்துழைப்பு மதிப்புமிக்க விளைவுகளாகவும் மாறியுள்ளது. கடந்த இரண்டு நாட்களில், உமாஜின் மூலம் தமிழ்நாட்டின் தொழில்நுட்ப வளர்ச்சி என்பது தனித்தனி துறைகளைச் சார்ந்து மட்டுமல்ல அல்ல, மாநிலத்தின் உண்மையான வலிமைகளை அடிப்படையாகக் கொண்டு, நன்கு ஒருங்கிணைந்த கருத்துக்களைச் சுற்றியே கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை நிரூபித்துள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர்

தமிழ்நாடு எப்போதுமே அறிவியலையும் தொழில்நுட்பத்தையும் திறந்த மனதுடன் வரவேற்கும் மாநிலம். புதிய முயற்சிகளுக்கும் ஆராய்ச்சிகளுக்கும் உறுதுணையாக இருக்கும் மாநிலம்.

தமிழ்நாடு எப்போதும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிகளை ஏற்றுக் கொள்வதில் முன்னணியில் நிற்கிறது. திராவிட இயக்கம் எப்போதும் அறிவியலுக்கு உறுதுணையாக நின்று வருகிறது. அதனால்தான் தமிழ்நாட்டு மக்கள் பல விஷயங்களில் எப்போதும் முற்போக்கு சிந்தனையோடு இருக்கிறார்கள்.

நமது தலைவர்களின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பார்வை, நாட்டின் மற்ற பகுதிகளுடன் ஒப்பிடுகையில், தனித்துவமானது. தொழில்நுட்பத்தை, முற்போக்கான சமூகத்தை உருவாக்கும் கருவியாக அவர்கள் கண்டார்கள். நாட்டிலேயே முதல்முறையாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1997 - இல் தமிழ்நாட்டுக்கான மாநில தகவல் தொழிற்நுட்ப கொள்கையை அறிமுகப்படுத்தினார்கள். 1998-இல் பள்ளிகளில் கணினிக் கல்வியைத் தொடங்கினார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அமைத்துக் கொடுத்த இந்த அடித்தளத்தின் மீதுதான், நாம் இன்று அனைத்து வளர்ச்சிகளையும் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறோம்.

நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில், தமிழ்நாடு ஐ.டி. துறையில் முன்னணியில் நிற்கிறது. அதேநேரம் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயன்கள் பின்தங்கிய பிரிவினரையும் சென்றடைய வேண்டும் என்பதை உறுதி செய்கிறது. முன்பு ரேடியோ, தொலைக்காட்சி போன்ற புதுமைகள் வந்தபோது, அவை மேல்தட்டு மக்களின் வீடுகளில் மட்டுமே இருந்தன. சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்கள் ரேடியோ கேட்கவோ, தொலைக்காட்சி பார்க்கவோ பணக்கார வீடுகளில் கூடி இருந்தனர்.

வண்ணத் தொலைக்காட்சிகள்

25 ஆண்டுகளுக்கு முன் பல கிராமங்களில் இருந்த நிலை இதுதான். ஒவ்வொரு வீட்டுக்கும் வண்ணத் தொலைக்காட்சிகளை வழங்கியதன் மூலம் முத்தமிழறிஞர் கலைஞர் இந்த நிலையை மாற்றினார். அதேபோல, தொழில்நுட்ப புதுமைகளின் பயன்கள் பணக்காரர்கள் மற்றும் நகர்ப்புறங்களில் மட்டும் முடங்கிவிடக் கூடாது. பொதுமக்கள் மற்றும் கிராமங்களுக்கும் சென்றடைய வேண்டும். இந்தப் பார்வையோடு, நமது மாண்புமிகு முதலமைச்சர் கல்லூரி மாணவர்களுக்கு 10 லட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கியுள்ளார்கள்.

தமிழ்நாடு ஏற்கனவே மனிதவளத்தில் பெரும் பலம் கொண்டது. இன்று பெரும்பாலான இளைஞர்கள் மடி கணினி உடையவர்களாக இருக்கிறார்கள். இது உமாஜின் தமிழ்நாட்டின் பங்கேற்பாளர்களுக்கு மிகவும் சாதகமான சூழலை உருவாக்கியுள்ளது. விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் எஸ்.டி.ஏ.டி. (SDAT) டிஜிட்டல் விளையாட்டு மேம்பாட்டில் மிகப் பெரிய உயரங்களை எட்டியுள்ளது என்பதில் பெருமிதம் கொள்கிறேன். நாட்டிலேயே முதல் முறையாக அத்லெட்டிக் மானேஜ்மென்ட் சிஸ்டம் (Athlete Management System - AMS) தொடங்கப்பட்டுள்ளது. இது வீரர்களால் மையப்படுத்தப்பட்ட, தரவு சார்ந்த பயிற்சியை வழங்குகிறது. ஏ.எம்.எஸ். (AMS) மூலம் வீரர்களின் பயிற்சி, உடல்நலம், செயல்திறன், எதிர்பாரா காயங்கள் தடுப்பு ஆகியவற்றை கண்காணிக்கிறோம்.

5,500-க்கும் மேற்பட்ட வீரர்கள்

இதன் மூலம் தற்போது 41 விளையாட்டு விடுதிகளில் செயல்படுத்தப்பட்டு, மாநிலம் முழுவதும் 5,500-க்கும் மேற்பட்ட வீரர்கள் பயனடைகின்றனர். தமிழ்நாடு இ-ஸ்போர்ட்ஸ் துறையிலும் முன்னணியில் உள்ளது. கடந்தாண்டு முதலமைச்சர் கோப்பையில் இ-ஸ்போர்ட்ஸ் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு இன்னும் விரிவாக்கப்பட்ட தனிப் பிரிவு போட்டியாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

முதல் ஆண்டே மாநிலம் முழுவதிலும் 6,000-க்கும் மேற்பட்டோர் பங்கேற்பில் பெரும் வெற்றியைப் பெற்றது.

தமிழ்நாட்டின் தரவு மையக் கொள்கை, தடையற்ற மின்சார விநியோகம், வலுவான இ-பைபர் இணைப்பு ஆகியவை டிஜிட்டல் உள்கட்டமைப்புக்கு உகந்த இடமாக நம் மாநிலத்தை உயர்த்தியுள்ளன. டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு மற்றும் அடுத்த தலைமுறை மின்னணு ஆளுகை குறித்த உமாஜின் அமர்வுகள், பெரிய அளவிலான டிஜிட்டல் அமைப்புகளை வடிவமைத்து வழங்குவதில், தமிழ்நாட்டின் நிரூபிக்கப்பட்ட திறனை வெளிப்படுத்தின.

தொழில்நுட்ப உச்சி மாநாடுகள்

தொழில்நுட்பம் , சேவை வழங்கல் மற்றும் நிறுவன திறனை மேம்படுத்துவதில் எத்தகைய பங்காற்றும் என்பதற்கு இந்த தளங்கள் தேசிய அளவில் முன்மாதிரியாகத் திகழ்கின்றன. மாநிலம் முழுவதிலும் உள்ள சிறு நகரங்கள் மற்றும் ஊர்களில் இருந்து ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் பங்கேற்றது, தமிழ்நாட்டின் புதுமைச் சூழல் உள்ளடக்கமானதாகவும் உலகளவில் இணைக்கப்பட்டதாகவும் இருப்பதை உறுதிப்படுத்துகிறது. இந்த உமாஜின் மாநாட்டில் கையெழுத்தான எம்.ஓ.யு. (MOU) - க்கள், அறிவிக்கப்பட்ட கூட்டாண்மைகள், தொடங்கப்பட்ட உரையாடல்கள்

இந்த நிகழ்வு மேலும் வளர்ச்சிக்கான ஊக்கியாக செயல்படுவதை வலியுறுத்துகின்றது. 2021-இல் முதலில் அறிவிக்கப்பட்ட உமாஜின், தொழில்நுட்பம், கொள்கை, புதுமை, பொது நோக்கம் ஆகியவை ஒன்றிணையும் தளமாக கருதப்பட்டது. அதன்பின் இது இந்தியாவின் மிகவும் நம்பகமான தொழில்நுட்ப உச்சி மாநாடுகளில் ஒன்றாக வளர்ந்துள்ளது. திறன் கட்டமைப்பில் இருந்து உலகளாவிய தலைமைத்துவத்துக்கான தமிழ்நாட்டின் பயணத்தைப் பிரதிபலிக்கிறது. இந்நிகழ்வின் வெற்றி, நாம் கட்டியெழுப்பிய தொழில்நுட்ப சூழலின் உறுதியையும், முன்னோக்கி செல்லும் உந்துதலையும் உணர்த்துகிறது.

நம்பகமான தாக்கம்

இந்த உமாஜின் மாநாடு, தமிழ்நாட்டை ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றும் பயணத்தில் கணிசமான பங்களிப்பைச் செய்யும் என்று நம்புகிறேன். உமாஜினின் நம்பகம்மிக்க தாக்கம், தமிழ்நாட்டை உலகளாவிய தளமாக வடிவமைப்பதில், மாண்புமிகு அமைச்சர் முனைவர் அண்ணன் பழனிவேல் தியாகராஜன் அவர்களின் தொடர்ச்சியான முயற்சிகளைப் பாராட்டுகிறேன்.

இந்த உமாஜின் தமிழ்நாடு 2026-ஐ அர்த்தமுள்ளத்தாக்கி அதனை வெற்றியடைய செய்த அனைத்து பங்கேற்பாளர்கள், கூட்டாளர்கள், பங்களிப்பாளர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைவருக்கும் பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகள்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

"அன்னம் தரும் அமுதகரம்" 325 வது நாள்!

எழும்பூர் பகுதியில் அமைச்சர்கள் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன் - பி.கே.சேகர்பாபு ஆகியோர் உணவு வழங்கினார்கள்!

சென்னை,ஜன.11-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவாக சென்னை கிழக்கு மாவட்டம் ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டு கழகத் தலைவரின் 72வது பிறந்த நாளையொட்டி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் ஏற்பாட்டில் "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் உன்னதமான திட்டமானது 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரை 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1200 நபர்களுக்கு மேல், வெவ்வேறு இடங்களில் காலை உணவு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இச்சிறப்புமிகு திட்டத்தை செயல்படுத்தும் வகையில் 20.2.2025 அன்று கொளத்தூரில் மதிப்புமிகு அண்ணியார் திருமதி.துர்கா ஸ்டாலின் அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்து சிறப்பித்தார்கள். அந்த வகையில் 24ஆம் நாள் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்களும், 30வது நாள் உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் கோவி. செழியன் அவர்களும், 50வது நாள் கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் திரு. ஆர்.காந்தி அவர்களும், 75வது நாள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா. சுப்பிரமணியம் அவர்களும், 100வது நாள் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களும், 125வது நாள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களும், 150வது நாள் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் அவர்களும், 175வது நாள் மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்களும், 200வது நாள் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் திரு.ஆர். எஸ்.ராஜகண்ணப்பன் அவர்களும், 225வது நாள் சட்டம் மற்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்களும், 250வது நாள் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. சிவ.வீ.மெய்யநாதன் அவர்களும், 275வது நாள் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என். நேரு அவர்களும், 300-வது நாளில் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி ராஜா அவர்களும் கலந்து கொண்டு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியானது வெற்றிகரமாக தொடர்ந்து 325வது நாளான நேற்று (10.1.2026), எழும்பூர் வடக்கு பகுதி, 78 அ வார்டு, அங்காளம்மன் கோயில் தெரு மைதானம் சந்திப்பு மற்றும் 65அ-வது வார்டு, ஜெயராம் நகர் ஆகிய 2 இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக " தகவல் தொழில் நுட்ப துறை மற்றும் டிஜிட்டல் துறை அமைச்சர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் அவர்கள்" கலந்து கொண்டு பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்.

இச்சிறப்புமிக்க "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" திட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தினந்தோறும் 300 நாட்களுக்கும் மேல் 600-க்கும் மேற்பட்ட இடங்களில் காலை 7.00 மணியளவில் கலந்து கொண்டு பசியாக வரும் பொது மக்களுக்கு, பசியாற காலை உணவு வழங்கிக் கொண்டிருக்கிறார். இச்சிறப்புமிக்க திட்டமானது பொது மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்று, அப்பகுதி மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு காலை உணவு அருந்திவிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வாழ்த்தி வருகிறார்கள் என்று பேசினார்.

இந்நிகழ்ச்சியில் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் வெற்றி அழகன், பகுதி செயலாளர்கள் வி.சுதாகர், சொ.வேலு, மாவட்ட அவைத் தலைவர்கோ.ஏகப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ.ஜெயின், கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.புனிதவதி எத்திராஜன், திருமதி.ராஜேஸ்வரி ஸ்ரீதர், சுந்தர்ராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சென்னை - விழுப்புரம் மண்டலத்திற்குட்பட்ட

மாவட்டச் செயலாளர்கள் - பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டம்!

கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா - மண்டலப் பொறுப்பாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில்!

சென்னை, ஜன. 11-

சென்னை - விழுப்புரம் மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு, பிப்ரவரி மாதத்தில் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள BLA2 / BLC பூத் கமிட்டி சந்திப்பு கூட்டத்திற்காக மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து விரிவான ஆலோசனைக் கூட்டம் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., விழுப்புரம் மண்டலப் பொறுப்பாளர் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன், சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா. மு. நாசர், சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை தா.வேலு எம்.எல்.ஏ, சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ , திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் எம்.எல்.ஏ., விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர். பொன் கௌதம் சிகாமணி, விழுப்புரம் மத்திய மாவட்ட செயலாளர் டாக்டர் ஆர். லட்சுமணன் எம்.எல்.ஏ, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ, ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம். இரா. மூர்த்தி எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்துகொண்டனர்.

சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் - கார்த்திக் மோகன் ஏற்பாட்டில்

அண்ணாநகர் 101 வது வட்டத்தில் 80,000 குடும்பங்களுக்கு பொங்கல் பரிசு! நே.சிற்றரசு வழங்குகிறார்!

தயாநிதி மாறன் - ச.பரமசிவம் - மெட்டில்டா கோவிந்தராஜ் - சி.பி.திருமலை பங்கேற்பு! க.கோவிந்தராஜ் அறிக்கை!

சென்னை, ஜன. 11 -

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டத்தில் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஆகியோர் ஏற்பாட்டில் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் விழா இன்று (11.01.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 8.30 மணியளவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அண்ணாநகர் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 (அ) வட்டச் செயலாளர் சி.பி.திருமலை ஆகியோர் பொதுமக்களுக்கு பொங்கல் பரிசுகளை வழங்குகின்றனர்.

நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்கள் வருமாறு :-

மண்டபம் ரோடு 1 வது முதல் 6 வது தெரு வரையிலும், பள்ளி அரசு தெரு, குஜ்ஜி தெரு, குமரன் நகர், 1 வது முதல் 3 வது தெரு வரையிலும், வ.உ.சி. நகர் நியூ காலனி, வ.உ.சி. காலனி, ஜி ப்ளாக், ஆர்.வி.நகர், டி ப்ளாக், திருவள்ளுவர் நகர், பாரத் பிளாட், ஆர்.வி.நகர் 1 வது முதல் 6 வது தெரு வரையிலும், ஆறுமுகம் தெரு, கெனால் ரோடு, டி.பி.சத்திரம் காவல் குடியிருப்பு, கீழ் பாக்கம் கார்டன் மெயின் ரோடு, ஆகிய இடங்களில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் 101 வது வட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், (BLA-2), (BDA), (BLC), வட்டச் செயற்குழு உறுப்பினர்கள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள் கழக உடன்பிறப்புகள், செயல்வீரர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.